# இ.எஸ்.ஐ. திட்டம் பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**இந்த கையேடு விழிப்புணர்வு நோக்கத்திற்காக மட்டுமே. இதனை சட்ட ஆவணமாக மேற்கோள் காட்டவோ / குறிப்பிடவோ இயலாது.**

**<u>பொருளடக்கம்</u>** **<u>பக்கங்கள்</u>**


| | |
|---|---|
| தொழிலதிபர்கள் மற்றும் தொழிலாளர்கள் தொடர்புடையது | 2 – 14 |
| வரையறைகள் / முக்கியச் சொற்கள் | 15 – 24 |
| இ.எஸ்.ஐ. பயன்களின் பட்டியல் மற்றும் பங்களிப்பிற்கான நிபந்தனைகள் | 25 – 29 |

## தொழிலதிபர்கள் மற்றும் தொழிலாளர்கள் தொடர்புடையது

1. இ.எஸ்.ஐ. திட்டம் என்றால் என்ன?

இந்தியாவின் தொழிலாளர் அரசு காப்பீட்டுத் திட்டமானது ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளில் உள்ள தொழிலாளிகளுக்கு உடல் நலக்குறைவு, மகப்பேறு, உடல் ஊனமுற்றல் மற்றும் வேலை செய்யும் போது ஏற்படும் இறப்பு போன்ற நிகழ்வுகளின் போது சமூக பொருளாதார பாதுகாப்பு வழங்கவும் மற்றும் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கும், அவரது குடும்ப நபர்களுக்கும் மருத்தவ உதவிகள் வழங்கவும் ஏற்படுத்தப்பட்ட பன்முக சமூக பாதுகாப்புத் திட்டமாகும்.

2. இ.எஸ்.ஐ. திட்டம் தொழிலாளிகளுக்கு எவ்வாறு உதவுகிறது?

இத்திட்டமானது இ.எஸ்.ஐ. சட்டத்தின் கீழ் பதிவு செய்த தொழிலாளிக்கு அவரது உடல் நலக்குறைவால் ஏற்படும் இயலாமையின் போதும், மீண்டும் உடல் நலம்பெறவும் மற்றும் வேலை செய்யும் திறனை மீண்டும் கொண்டு வரவும் முழு மருத்துவ பராமரிப்பு அளிக்கிறது. உடல் நலக்குறைவு, மகப்பேறு மற்றும் வேலை செய்யும் போது ஏற்படும் காயங்கள் போன்ற நிகழ்வுகளினால் எடுக்கும் விடுப்புகளின் போது ஏற்படும் சம்பள இழப்பை ஈடு செய்ய நிதி உதவி அளிக்கிறது. இத்திட்டமானது தொழிலாளியின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மருத்துவ பராமரிப்பினை வழங்குகிறது.

3. இ.எஸ்.ஐ. திட்டத்தினை நிர்வகிப்பது யார்?

இந்த இ.எஸ்.ஐ. திட்டமானது தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், மத்திய அரசு, மாநில அரசு, மருத்துவத் தொழில் மற்றும் மதிப்புமிகு பாராளுமன்றத்தின் உறுப்பினர்களின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்ட தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம் என்ற சட்டபூர்வ கழகத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

'பொது இயக்குனர்' கழகத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் பதவி வழி உறுப்பினராகவும் உள்ளார்.

4. இ.எஸ்.ஐ. கழகத்தின் மற்ற அமைப்புகள் எவை?

தேசிய அளவில், ஸ்டாண்டிங் கமிட்டி (கழகத்தின் பிரதிநிதித்துவ அமைப்பு) கழக விவகாரங்களின் நிர்வாகத்திற்கும் மற்றும் மருத்துவ பயன் குழு(மெடிக்கல் பெனிபிட் கவுன்சில்) என்ற சிறப்புத் தன்மை கொண்ட அமைப்பு மருத்துவ பயன்களின் நிர்வாகத்தில் கழகத்திற்கு அறிவுரை வழங்கவும் செயல்படுகிறது.

மண்டல அளவில், மண்டல குழுக்கள் மற்றும் உள்ளூர் குழுக்கள் ஆகியவை திட்டத்தின் செயல்பாட்டை ஆய்வு செய்யவும் மற்றும் அதனை மேம்படுத்த பரிந்துரைகள் வழங்கவும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 'மருத்துவமனை மேம்பாட்டுக் குழு' மருத்துவமனைகளை மேம்படுத்த அமைக்கப்பட்டுள்ளது மற்றும் 'மாநில நிர்வாகக்குழு' ஒரு குறிப்பிட்ட மாநில/யூனியன் பிரதேசத்தின் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களின் செயல்பாட்டினை கண்காணிக்கவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5. இத்திட்டத்திற்கான நிதி எவ்வாறு கிடைக்கிறது?

இந்த இ.எஸ்.ஐ. திட்டமானது சுயநிதி திட்டமாகும். இந்த இ.எஸ்.ஐ. நிதி முக்கியமாக தொழிலதிபர்கள் மற்றும் தொழிலாளர்களிடம் ஊதியத்தில் குறிப்பிட்ட சதவீதமாக பெறப்படும் பங்களிப்பு தொகையிலிருந்து கிடைக்கிறது. மருத்துவ பயன்களுக்கு செலவழிக்கப்படும் தொகையில் 1/8 பங்கினை மாநில அரசுகள் ஏற்றுக் கொள்கின்றன.

6. செயல்படுத்தப்பட்ட பகுதி என்றால் என்ன?

இ.எஸ்.ஐ. சட்டத்தின் கீழ் கிடைக்கும் மருத்துவ மற்றும் பிற பயன்கள் வருங்கால பயனாளிகளுக்கு கிடைப்பதற்காக உள்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டபின் அரசிதழ் வாயிலாக அறிவிக்கப்பட்டு இ.எஸ்.ஐ. திட்டமானது நாட்டின் பல பகுதிகளில் பல கட்டங்களாக செயல்படுத்தப்படுகின்றது.

7. மத்திய அரசால் பிரிவு 1(3)ன் கீழ் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள எந்தெந்த நிறுவனங்கள் இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் வரும்?

மத்திய அரசால் பிரிவு 1(3)ன் கீழ் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளிகளைக் கொண்ட அனைத்து தொழிற்சாலைகளும் பிரிவு 2(12) கீழ் இ.எஸ்.ஐ. சட்டத்தின் கீழ் வரும். மேலும். சட்டத்தின் பிரிவு 1(5)ன் கீழ் பொருத்தமான அரசால்(மத்திய / மாநில) அரசால் அறிவிக்கப்பட்டவாறு, 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளிகளை கொண்ட பின்வரும் நிறுவனங்கள் இ.எஸ்.ஐ.ன் கீழ் வரும்.

(i) கடைகள்
(ii) உற்பத்தி செயல்பாடு அற்ற, ஆனால் விற்பனையில் மட்டும் ஈடுபடும் விடுதிகள் மற்றும் உணவகங்கள்
(iii) திரையரங்குகள், முன்னோட்ட திரையரங்குகள் உள்பட
(iv) சாலை மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள்
(v) செய்தித்தாள் நிறுவனங்கள் (பிரிவு 2(12)ன் கீழ் இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் வராதவை)
(vi) தனியார் கல்வி நிறுவனங்கள் (தனிமனிதர், அறங்காவலர்கள், சமூகங்கள் மற்றும் மற்ற அமைப்புகளால் நடத்தப்படுபவை) மற்றும் மருத்துவ நிறுவனங்கள் (பெருநிறுவனம், கூட்டுத் துறை, தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் உடைமை மருத்துவமனைகள், மருத்துவ இல்லங்கள், டயக்னோஸ்டிக் சென்டர்கள், நோயியல் ஆய்வகங்கள் உள்ளிட்டவை)

சில மாநிலங்களில் கவரேஜ் ஆனது பிரிவு 1(5)ன் கீழ் 20 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் பணிபுரிந்தால் மட்டுமே. சில மாநில அரசுகள் மருத்துவ மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு இத்திட்டத்தினை விரிவுபடுத்தவில்லை.

## பதிவு செய்யும் முறை

8. தொழிற்சாலை/நிறுவனங்களின் பதிவு என்றால் என்ன?

இத்திட்டம் பொருந்தும் எல்லா தொழிற்சாலை/நிறுவனங்கள் தாமாகவே இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். அல்லது எப்போது ஒரு தொழிற்சாலை/நிறுவனம் இ.எஸ்.ஐ ஆல் அடையாளம் காணப்படுகிறதோ, அப்போது அவை தாமாகவே இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யுமாறு கேட்கப்படும்.

9. இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் தொழிலதிபர்களுக்கு கட்டாயமா?

ஆம். பிரிவு 2A மற்றும் விதிமுறை 10-B ன் கீழ் தொழிற்சாலை/நிறுவனத்தை அவர்களுக்கு இ.எஸ்.ஐ திட்டம் பொருந்தும் நாளிலிருந்து 15 தினங்களுக்குள் இ.எஸ்.ஐ. சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் தொழிலதிபர்களின் சட்டபூர்வ பொறுப்பாகும்.

10. தொழிலதிபர்கள் பதிவு செய்வதற்கான வழிமுறை யாது?

இத்திட்டம் பொருந்தும் தொழிற்சாலை/நிறுவனம், இ.எஸ்.ஐ பொருந்தும் நாளிலிருந்து 15 தினங்களுக்குள் இ.எஸ்.ஐ.சி இணையதளம் அதாவது www.esic.in என்ற இணையத்தில் பதிவு செய்தல் வேண்டும். தொழிற்சாலை/ நிறுவனத்தின் பெயர், முகவரி, முதன்மை தொழிலதிபரின் பெயர், வங்கிக் கணக்கு, PAN, தொழிற்சாலையாக இருப்பின் மின் உபயோகம், மாநிலம் மற்றும் மண்டலம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை கொடுத்து உள் நுழைய வேண்டும். பதிவு செய்ய முயற்சிக்கும் தொழிலதிபர் பயனாளர் குறியீடு (User ID) மற்றும் கடவுச்சொல்லை(Password) தங்களது மின்னஞ்சல் முகவரியில் பெறுவர். தொழிலதிபர் www.esic.in என்ற முகவரியில் உள்நுழையலாம். அவர் தனது மின்னஞ்சல் முகவரியை பயனாளர் குறியீடாக (User ID) பயன்படுத்தலாம் மற்றும் மின்னஞ்சல் முகவரியில் பெறப்படும் கடவுச்சொல்லை பயன்படுத்தி தகவல்களை அளித்து இ.எஸ்.ஐ. இணையதளத்தில் அவரது நிறுவனத்தை பதிவு செய்ய முடியும். வெற்றிகரமாக பதிவு செய்த பின் 17 இலக்க குறியீட்டு எண் தானாகவே உருவாக்கப்படும்.

11. குறியீட்டு எண் (Code Number) என்றால் என்ன?

இது இத்திட்டத்தின் கீழ் உள்ள விதிகளின்படி ஒவ்வொரு தொழிற்சாலை/ நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட 17 இலக்கமுடைய தனித்துவமான அடையாள எண் ஆகும். இந்த எண்ணானது தொழிலதிபர்களால் பொருத்தமான தகவல்கள் இ.எஸ்.ஐ. இணையதளத்தில் சமர்பிக்கப்பட்டபின் உருவாக்கப்படும். சமூகப் பாதுகாப்பு அதிகாரியிடமிருந்து (Social Security Officer) சர்வே அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னும் இந்த எண்ணை உருவாக்கலாம்.

12. துணை குறியீடு (Sub Code) எண் என்றால் என்ன?

துணை குறியீடு எண் என்பது இ.எஸ்.ஐ. திட்டத்திற்கு உட்பட்ட தொழிற்சாலை அல்லது நிறுவனம், அமையப்பெற்ற மாநிலத்திலோ அல்லது வேறு மாநிலத்திலோ உள்ள அதன் துணை அலகு, கிளை அலுவலகம், விற்பனை அலுவலகம் அல்லது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்திற்கு ஒதுக்கப்படும் தனித்துவமான அடையாள எண். தொழிலதிபர் எந்தவொரு கிளை அலுவலகம் அல்லது விற்பனை அலுவலகத்தினையும் தன் சான்றுகள் மற்றும் தனிப்பட்ட முதன்மை குறியீட்டு எண்ணை இ.எஸ்.ஐ.சி. இணையதளத்தை உபயோகித்து பதிவு செய்யலாம்.

13. ஒருமுறை பதிவு செய்யப்பட்டு இச்சட்டத்தின் வரையறைக்கு உட்பட்ட ஒரு நிறுவனம், வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைந்தபட்ச வரம்பிற்கு கீழே சென்றால், இச்சட்டத்தின் வரையறையில் இருந்து வெளியேற நேரிடுமா?

இச்சட்டத்தின் வரையறைக்கு ஒருமுறை உட்பட்ட நிறுவனம், மொத்த தொழிலாளர்கள்/ இ.எஸ்.ஐ. சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளார்களின் எண்ணிக்கை குறைந்தபட்ச வரம்பிற்கு கீழே சென்றாலும், உற்பத்தி செயல்பாடு மாறினாலும், இச்சட்டத்தின் வரையறைக்கு உட்பட்டதாகவே இயங்கும்.

14. ஒரு நிறுவனம் அல்லது தொழிற்சாலை இச்சட்டத்தின் வரையறைக்கு உட்படாது விலக்கு அளிக்க வழிவகை உண்டா?

ஆம். இச்சட்டத்தின் வரையறைக்கு உட்பட்ட ஒரு நிறுவனம் அல்லது தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, இச்சட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் சலுகைகள் மற்றும் பயன்களுக்கு ஈடாகவோ அல்லது அவற்றை விட அதிகமாகவோ வேறு ஏதும் வழியில் தரப்படுமாயின், இச்சட்டத்திலிருந்து விலக்கு அளிக்க வழிவகை உண்டு.

இத்தகைய தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கு, இ.எஸ்.ஐ. கழகத்திடம் ஆலோசித்து, மத்திய (அ) மாநில அரசு ஓராண்டிற்கு மிகாமல் விலக்கு அளிக்கலாம். அவ்வாறு விலக்கு அளிக்கப்பட்ட நிறுவனம் / தொழிற்சாலை, விலக்கு முடிவதற்கு மூன்று மாதங்களுக்கு முன் விலக்கை புதுப்பிக்க விண்ணப்பிக்க வேண்டும்.

15. ஒரு தொழிலாளியின் மாத ஊதியம் 21,000த்தை தாண்டுமாயின், இச்சட்டத்தின் வரையறைக்கு உட்படாதவராக கருதி, பங்களிப்புத் தொகை பிடித்தலை நிறுத்திவிடலாமா?

பங்களிப்பு காலம் தொடங்கிய பின் ஒரு தொழிலாளியின் ஊதியம் (கூடுதல் நேர பணிக்கான ஊதியம் தவிர்த்து) மத்திய அரசு நிர்ணயித்த ஊதிய வரம்பைவிட அதிகமானால் அப்பங்களிப்பு காலம் முடியும் வரை, இச்சட்டத்தின் வரையறைக்கு உட்பட்ட தொழிலாளியாக கருதி, பங்களிப்பு தொகை பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

16. பின்னோக்கிய தேதியில் (Retrospective date) இருந்து ஊதிய உயர்வு அளித்தலின் விளைவு என்ன?

ஒரு தொழிலாளிக்கு பின்னோக்கிய தேதியில் ஊதிய உயர்வு வழங்கப்பட்டு, வரையறுக்கப்பட்ட ஊதியத்தை விட அதிகமாக வாங்கினால், ஊதிய உயர்வு

அறிவிக்கப்பட்ட பங்களிப்பு காலம் முடியும் வரை இச்சட்டத்தின் வரையறைக்கு உட்பட்டவராகவே கருதப்படுவார். ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்ட மாதத்திலிருந்து பங்களிப்பு தொகையை கூடுதல் ஊதியத்திற்கும் செலுத்த வேண்டும். அறிவிக்கப்பட்ட மாதத்திற்கு முன்பான காலத்திற்கு வழங்கப்படும் நிலுவைத் தொகைக்கு பங்களிப்பு செலுத்த தேவையில்லை.

17. ஒரு தொழிலாளியின் ஊதியம் மத்திய அரசு நிர்ணயித்த ஊதிய வரம்பைவிட அதிகமானால், எதற்காக ஊதிய உச்சவரம்பை மீறிய மொத்த ஊதியத்திற்கும் பங்களிப்பு செலுத்த வேண்டும்?

ஒரு பங்களிப்பு காலம் தொடங்கிய பின்னான எந்தவொரு மாதத்திலும், ஒரு தொழிலாளியின் ஊதியம் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய வரம்பை தாண்டுமானால், அப்பங்களிப்பு காலம் முடியும் வரை ஒரு தொழிலாளியாகவே கருதப்படுவார். இது தொடர்பான விதி கீழ்வருமாறு :

“இ.எஸ்.ஐ. (சென்ட்ரல்) விதி, 1950 – விதி 50ன் படி, ஒரு பங்களிப்பு காலம் தொடங்கிய பின், ஒரு தொழிலாளியின் மாத ஊதியம் (கூடுதல் நேர பணிக்கான ஊதியம் தவிர்த்து) (இருபத்தோராயிரத்தை) தாண்டுமாயின், அப்பங்களிப்பு காலம் முடியும்வரை தொழிலாளியாகவே தொடர்வார்.

18. தொழிலாளி இச்சட்டத்தின் வரையறைக்கு உட்பட்டவரா என்பதை நிர்ணயிக்கும் ஊதிய உட்சவரம்பு கணக்கிலிருந்து எதற்காக கூடுதல் நேர பணிக்கான ஊதியத்தை தவிர்க்க வேண்டும்?

கூடுதல் நேர பணிக்கான ஊதியம் என்பது முறைபடுத்தப்பட்ட, தொடர்ச்சியான ஊதியம் இல்லை. ஊதிய உச்சவரம்பை நிர்ணயிக்க கூடுதல் நேர பணிக்கான ஊதியத்தையும் எடுத்துக்கொண்டால், இச்சட்டத்தின் வரையறைக்கு உட்படாதவராக சில காலமும், கூடுதல் நேர வேலை இல்லாத போது வரையறைக்கு உட்பட்டவராகவும் விளங்குவார்.

எனினும், கூடுதல் நேர வேலையின் போது நேரிடக்கூடும் ஆபத்துகளை காப்பீட்டு வரையறைக்குள் கொண்டு வரவும், கூடுதல் ஊதியத்துக்கு ஏற்றார் போல் கூடுதலான விகிதத்தில் பணம் பெற்றிடவும், கூடுதல் நேர பணிக்கான ஊதியம் பங்களிப்பு தொகை செலுத்தும்போது கணக்கில் கொள்ளப்படும்.

19. தொழிலதிபர்களின் பங்களிப்பினை செலுத்தாமல் விலக்கு அளிக்க ஏதேனும் வழிவகை உண்டா?

இத்திட்டத்தின் கீழ் 01.04.2008-ல் இருந்து மாற்றுத்திறன் தொழிலாளிகளுக்கான ஊதிய உச்ச வரம்பு ரூ.25000-ஆக உயர்த்தப்பட்டது. தொழிலதிபர்கள் மாற்றுத்திறன் தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்துவதை ஊக்குவிக்க 01.04.2016-லிருந்து இ.எஸ்.ஐ. பலன்களை பெற ஊதிய உச்சவரம்பு இல்லை. மாற்றுத்திறன் தொழிலாளி வேலைக்கு அமர்த்தப்பட்ட பங்களிப்பு காலத்திலிருந்து, அதிகபட்சமாக 10 வருடங்களுக்கு, தொழிலாளிக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்பு தொகையில் தொழிலதிபரின் பங்கினை செலுத்துவதிலிருந்து தொழிலதிபர் விலக்கு அளிக்கப்பட்டுள்ளார். இத்தொழிலதிபர் பங்களிப்பு தொகையினை இந்திய அரசாங்கத்தின் சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சகம் தொ.அ.கா.கழகத்திற்கு செலுத்திவிடும்.

20. பங்குத்தொகை செலுத்துவதற்கான காலவரம்பு எவ்வளவு?

இ.எஸ்.ஐ. கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் குறிப்பிட்ட ஊதிய காலத்தின் பங்குத்தொகையை, தொழிலாளியின் சார்பாக, பங்களிப்பு செலுத்த வேண்டிய மாதத்தின் கடைசி நாளிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.

21. பங்குத்தொகையின் கணக்கீட்டு முறை மற்றும் செலுத்தும் முறை யாவை?

ஒவ்வொரு தொழிலதிபரும் அவரிடம் பணிபுரியும் அனைத்து தொழிலாளிகளின் பெயர்களையும் பதிவு செய்த பின்னர், இ.எஸ்.ஐ. இணையதளத்தில் மாதந்தோறும் பங்குத்தொகையை பதிவு செய்ய வேண்டும். மொத்தம் செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகையை அறிந்து கொள்ள வசதியாக, ஒவ்வொரு தொழிலாளிகளுக்கும் அளித்த ஊதியத் தொகையை நாள் வாரியாக பதிவு செய்ய வேண்டும்.

தோழிலதிபர்கள் பங்களிப்புத் தொகையை SBI மற்றும் 58 இதர வங்கிகளின் Online Payment Gateway மூலம் செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு மாதமும், அனைத்து தொழிலாளிகளின் மொத்த பங்களிப்புத் தொகையையும் இ.எஸ்.ஐ.சி. இணையதளத்தில் தக்க சான்றுகளை உபயோகித்து (Online challan எடுத்து challan மூலம் SBIன் எந்த கிளையில் வேண்டுமானாலும் செலுத்தலாம்.

22. தொழிலாளியின் பங்களிப்பு தொகை கழிக்கப்பட்ட பின்னரும் தொகையை செலுத்தாமல் இருப்பதாலோ அல்லது தாமதமாக செலுத்துவதாலோ ஏற்படும் விளைவுகள் யாவை?

தொழிலாளிகளிடமிருந்து தொழிலதிபர்களால் தொழிலாளியின் சார்பாக கழிக்கப்பெறும் ஊதியத் தொகையானது, இ.எஸ்.ஐ. சட்டம் 1948ன் 40(4) பிரிவின்படி, பங்களிப்புத் தொகை செலுத்த தொழிலதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகும். அத்தொகையை செலுத்தாமல் இருப்பதோ அல்லது தாமதமாக செலுத்துவதோ ‘நம்பிக்கை துரோகமாக’ மதிப்பிடப்படும். மேலும், அது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 406, 409 மற்றும் இ.எஸ்.ஐ. சட்டப்பிரிவு 85ன் படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

23. தாமதமாக செலுத்தப்படும் தொகைக்கு வட்டி ஏதேனும் உண்டா?

ரெகுலேஷன் 31ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கால அளவுக்குள் பங்களிப்புத் தொகையை தொழிலதிபர் செலுத்தத் தவறினால், தாமதமான/கட்டத் தவறிய ஒவ்வொரு நாளுக்கும் 12% வீதம் தனிவட்டியாக வசூலிக்கப்படும். (ரெகுலெஷன் 31-A)

24. செலுத்தப்படாத அல்லது தாமதமாக செலுத்தப்படும் பங்களிப்புத் தொகைக்கான தண்டனைகள் யாவை?

ரெகுலேஷன் 31ன் கீழ் உள்ளபடி, பங்களிப்புத் தொகையின் அளவிற்கு மிகாமல், பின் வருமாறு அபராதம் வசூலிக்கப்படும்.

| தாமதமாகும் காலம் | | அபராதம் |
|---|---|---|
| i) | 2 மாதங்களுக்குள் இருந்தால் | 5% |
| ii) | 2 – 4 மாதங்கள் | 10% |
| iii) | 4 – 6 மாதங்கள் | 15% |

iv) 6 மாதங்களுக்கு மேல் 25%

இ.எஸ்.ஐ. சட்டப்பிரிவு 85(A)வின் படி முதல்முறை குற்றத்திற்காக தொழிலதிபர் வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படுவார். இதே குற்றத்தை மீண்டும் செய்யும் பட்சத்தில் பிரிவு 85(A)ன் கீழ் உயர்த்தப்பட்ட தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

**பதிவுகள் பராமரிப்பு**

25. இ.எஸ்.ஐ.-ன் பொருட்டு பராமரிக்கப்பட வேண்டிய பதிவுகள் யாவை?

1. Muster Roll, ஊதிய ஆவணங்கள் மற்றும் இதர சட்டங்களுக்கு உட்பட்டு பராமரிக்க வேண்டிய கணக்கு புத்தகங்கள்

2. விபத்து பதிவேடு – புதிய படிவம் 11ல்

3. ஆய்வுப் புத்தகம்

4. முதன்மை பணியாளரின் கீழ் பணிபுரியும் தொழிலாளிகளின் பெயர்கள் அடங்கிய பதிவேட்டினை இரண்டாம் நிலை தொழிலதிபர்(Immediate employer) பராமரிக்க வேண்டும்.

26. தொழிலதிபர்கள் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகள் யாவை?

1. விபத்து அறிக்கை :

விபத்து பற்றிய அறிக்கையினை சம்பந்தப்பட்ட கிளை அலுவலகத்தில் படிவம் - 12 வாயிலாக 24 மணி நேரத்திற்குள் ஆன்லைனில் சமர்ப்பிக்க வேண்டும்.

2. விடுப்பு சரிபார்ப்பு அறிக்கை(Abstention Verification Report) : கிளை மேலாளர் எந்தவொரு காப்பீடு பெற்ற நபர் தொடர்பாக இந்த அறிக்கையை கேட்கும் போது கிளை அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.

3. தொழிலாளர் சட்டப்படி தேவைப்படுகிற முதன்மை தொழிலதிபர் தொடர்பான வருகை, ஊதியம் மற்றும் கணக்கு புத்தகங்கள் உள்ளிட்ட பிற ஆவணங்கள் மற்றும் இரண்டாம் நிலை தொழிலதிபர் தொடர்பான ஆவணங்கள்.

**தொழிலாளர்களின் பதிவு**

27. காப்பீடு பெற்ற நபரின் பதிவு என்பது என்ன?

ஒரு தொழிலாளர் காப்பீடு பெறப்பட்ட வேலையில் சேர்ந்ததற்கான தகவல்களை பெற்று பதிவேற்றும் முறையே சட்டத்தின் கீழ் பதிவு எனப்படும். தொழிலதிபர் பணியில் சேர்ப்பதற்கு முன் காப்பீடு பெறும் தொழிலாளரை ஆன்லைன் மூலமாக பதிவு செய்ய வேண்டும். தொழிலாளர் தற்காலிக அடையாள (TIC) அட்டையை உருவாக்கலாம். இந்த அட்டையானது 30 நாட்கள் செல்லத்தக்கதாகும். ஆதார் எண் TIC-ல் சேர்க்கப்பட்டால், ஈ-பெஹசான் (நிரந்தர அடையாள அட்டை)-ஆக மாறும்.

28. காப்பீடு பெற்ற நபரின் பதிவு எதனால் அவசியம் ஆகிறது?

ஒரு தொழிலாளரின் பதிவு என்பது ஒவ்வொரு காப்பீடு பெற்ற தொழிலாளரின் சார்பாக தொழிலதிபரால் கட்டப்படும் பங்குத்தொகை சார்ந்து இ.எஸ்.ஐ. சட்டத்தின் கீழ் உள்ள பயன்களை வழங்குவதற்கு அவர் காப்பீடு பெற்ற வேலையில் சேர்ந்ததற்கான அடையாளத்தை குறிக்கும் செயல்முறை.

29. தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் எவ்வாறு பதிவு செய்யப்படுகிறார்கள்?

காப்பீடு பெற்ற தொழிலில் சேரும் போது, ஒரு தொழிலாளி தனது மற்றும் தனது குடும்பத்தினரின் விவரங்களை குடும்ப புகைப்படத்துடன் தொழிலதிபரிடம் கொடுப்பதின் மூலம் தொழிலதிபர், தொழிலாளிகளை ஆன்லைனில் பதிவு செய்ய முடியும். ஒரு தொழிலாளியின் இந்த பதிவு முறையானது அவரது முழு காப்பீடு பெற்ற பணியின் போது ஒரே ஒரு முறை மட்டும் செய்யப்படும் முறையாகும். முதன்முறை செய்யப்படும் பதிவின் போது கொடுக்கப்படும் காப்பீட்டு எண்ணையே வேலை மாறுதல், இட மாறுதல் இருந்தாலும் அவரது வாழ்நாள் முழுவதற்கும் உபயோகப்படுத்த வேண்டும்.

30. அடையாள அட்டை என்றால் என்ன?

ஒரு தொழிலாளியை ஆன்லைனில் பதிவு செய்த பின், தொழிலதிபரால் தற்காலிக அடையாள சான்றிதழை(TIC) பிரதி எடுக்க முடியும். ஆதார் எண்ணை காப்பீட்டு எண்ணுடன் இணைத்தால், TIC நிரந்தர அடையாள அட்டையாக(PIC) தானாகவே மாறும். இந்த PIC கொண்டு, காப்பீடு பெற்ற நபரும் அவரது குடும்பத்தினரும் இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் உள்ள பயன்களை எந்தவித இடையூறுமின்றி பெறமுடியும். காப்பீடு பெற்ற நபர் அல்லது அவரது குடும்பத்தினரின் ஆதார் எண் இல்லையெனில், தொழிலதிபர் காப்பீடு பெற்ற நபர் மற்றும் அவரது குடும்பத்தினரின் புகைப்படத்தை TICல் ஒட்டி அவரது முத்திரை மற்றும் கையொப்பமிட்டு அங்கீகரிக்க வேண்டும். இந்த TIC-ஆனது ஒரு மாத காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும்.

மருந்தகங்கள்/மருத்துவமனைகளில் மருத்துவ பயன்கள் பெறவும் மற்றும் கிளை அலுவலகத்தில் பணப்பயன் பெறவும், காப்பீடு பெற்ற நபர் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரது ஆதார் எண்ணை ஒரு மாத காலத்திற்குள் www.esic.in என்ற இணையதளத்தை பயன்படுத்தி இணைக்க வேண்டும். அவரது முகவரி, மருந்தகம், பணி ஆகியவற்றில் ஏதேனும் மாற்றம் இருந்தால் தொழிலதிபர் இ.எஸ்.ஐ.சி. இணையதளத்திலும் உடனுக்குடன் மாற்ற வேண்டும்.

## மருத்துவ பயன்கள்

31. மருத்துவ பயன் என்றால் என்ன?

மருத்துவ பயன் என்பது தேவைப்படும்போது, இ.எஸ்.ஐ. சட்டத்தின் படி காப்பீடு பெற்ற நபருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மருத்துவ தேவைகளையும் மற்றும் சிகிச்சையையும் அளித்தல். இந்த ஒரு பயன் மட்டுமே அவர்களது ஊதியம் மற்றும் பங்களிப்பு பாகுபாடின்றி ஒரே மாதிரியாக தேவைக்கேற்றாற் போல் இ.எஸ்.ஐ.ஆல் நடத்தப்படும் மாதிரி மருத்துவமனைகள்(டில்லி தவிர) உட்பட மாநில அரசுகள் வாயிலாக வழங்கப்படுகின்றது.

32. மருத்துவ பயனின் அளவுகோல் என்ன?

முழு மருத்துவம், வெளி அறுவை சிகிச்சை மற்றும் நோயாளி சிகிச்சை மற்றும் உள் நோயாளி சிகிச்சை கொண்ட மகப்பேறியல் சிகிச்சை, மருந்துகள் வழங்குதல் மற்றும் காயத்தை சீர்படுத்துதல், நோயியல் மற்றும் கதிரியக்க ஆய்வுகள், மகப்பேற்றுக்கான முந்தைய மற்றும் பிந்தைய பராமரிப்பு, அதி உன்னத ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள், ஆம்புலன்ஸ் சேவைகள், செயற்கை உபகரணங்கள் வழங்குதல் மற்றும் இதர அனைத்தும்.

33. மருத்துவப் பயன் எதுவரை பெறலாம்?

காப்பீடு பெற்ற தொழிலில் சேர்ந்த முதல் நாளிலிருந்து காப்பீடு பெற்ற நபரும் அவரது குடும்பத்தினரும் மருத்துவ பயன் பெற தகுதியுடையவர்கள். முதன்முறை இந்த திட்டத்தின் கீழ் வரும் நபர் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை மருத்துப் பராமரிப்பை தனக்கும் மற்றும் குடும்பத்திற்கும் மூன்று மாதங்கள் பெற தகுதியுடையவர்கள். காப்பீடு பெற்ற தொழிலில் மூன்று மாதங்கள் அல்லது அதற்கு மேல் தொடர்ந்தால், இந்த பயனானது பயன் காலம் ஆரம்பிக்கும் வரை கிடைக்கும். காப்பீடு பெற்ற நபர் ஆன்லைன் பதிவு நாளிலிருந்து 2 ஆண்டுகள் இ.எஸ்.ஐ. கவரேஜில் இருந்து 156 நாட்களுக்கு குறையாமல் பங்களிப்புத் தொகை செலுத்தியிருந்தால் மற்றும் காப்பீடு பெற்ற நபர் ஏதாவதொரு பங்களிப்புக் காலத்தில் உடல் நலக்குறைவுக்கான பயன் பெற தகுதியுடையவரெனில் மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள 34 நீண்ட கால நோய்களில் ஏதேனும் ஒன்றால் பாதிக்கப்பட்டிருந்தால், பணி செய்யும் திறன் பெறும் வரை அல்லது மூன்று வருடங்களில் 730 நாட்கள் தனக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் மருத்துவ பயன் கிடைக்கும்.

மேலும், காப்பீடு பெற்ற நபர் ஆன்லைன் பதிவு நாளிலிருந்து 2 ஆண்டுகள் இ.எஸ்.ஐ. கவரேஜில் இருந்து நோய் கண்டறிந்த தேதிக்கு முன் 156 நாட்களுக்கு குறையாமல் பங்களிப்புத் தொகை செய்திருந்தால் மற்றும் காப்பீடு செய்யப்பட்ட நபர்/காப்பீடு செய்யப்பட்ட பெண் உடல் நலக்குறைவுக்கான பயனை பெற குறைந்தது இரண்டு பங்களிப்பு காலங்களில் தகுதியுடையவராயிருந்தால் அவர் மற்றும் அவரது குடும்பத்தினர் அதி உன்னத சிகிச்சை பெற தகுதியுடையவர்களாகின்றனர். காப்பீடு செய்யப்பட்ட நபர்/காப்பீடு செய்யப்பட்ட பெண்ணிற்கு விபத்து நேர்ந்தால் இந்த பங்களிப்பு நிபந்தனை அதி உன்னத சிகிச்சைக்கு பொருந்தாது.

34. காப்பீடு பெற்ற நபரின் குடும்பம் அதே மாநிலத்தில் வேறு இடத்திலோ அல்லது வேறு மாநிலத்திலோ வசித்தால், அவரது குடும்பம் எவ்வாறு மருத்துவ பயன் பெறமுடியும்?

குடும்பத்தினர் அதே மாநிலத்தில் அல்லது வேறு மாநிலத்தில் வேறு இடத்தில் வசித்தால், காப்பீடு பெற்ற நபர் அளிக்கும் உறுதிமொழி மற்றும் தொழிலதிபர் கொடுக்கும் சான்றிதழ் அடிப்படையில், குடும்பத்தினருக்கு அவர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள இ.எஸ்.ஐ. மருந்தகங்களில் மருத்துவ பயன்கள் பெற 'குடும்ப அடையாள அட்டை' வழங்கப்படும். IT Roll out 09.06.2011ல் துவங்கிய பிறகு, குடும்பத்தினருக்கும் தனியாக 'பெஹ்சான் அட்டை' வழங்கப்படுகிறது. இந்த ஆதார் அடிப்படையிலான பெஹ்சான் அட்டையை சமர்ப்பிப்பதன் மூலம், குடும்பத்தினர் அவர்கள் வசிக்கும் இடத்தில் உள்ள அல்லது நாட்டின் பிற பகுதிகளில் உள்ள எந்தவொரு இ.எஸ்.ஐ. மருந்தகங்கள்/மருத்துவமனைகளில் மருத்துவ பயன் பெற முடியும். காப்பீடு பெற்ற நபர் அவர் வேலை செய்யும் இடத்தில் அவருக்கும் மற்றும்

அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு அவரது சொந்த ஊர் அல்லது வேறு ஊர் என இரண்டு மருந்தகங்களை மருத்துவ பயன் பெற தேர்ந்தெடுக்க வழி உள்ளது.

35. காப்பீடு பெற்ற நபர் தற்காலிகமாக வேறு இடத்திற்கு சென்றால் எவ்வாறு மருத்துவ பயன் பெற முடியும்?

தொழிலாளி அவருடைய மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுடைய ஆதார் கார்டை காப்பீட்டு எண்ணுடன் ஆன்லைனில் இணைப்பதன் மூலம், நாடு முழுவதும் உள்ள எந்தவொரு ESIC/ESIS மருந்தகங்களில் தகுதியினடிப்படையில் மருத்துவ பயன்பெற முடியும். எனினும், இந்த பயனை எளிதாக பெற்றிட, நிரப்பப்பட்டு தொழிலதிபரால் கையெழுத்திடப்பட்ட Form-105ஐ வைத்திருத்தல் அவசியம்.

36. சார்ந்தோருக்கான பயன் எவ்வளவு காலம் எந்த விகிதத்தல் வழங்கப்படுகிறது?

சார்ந்தோருக்கான பயன் விகிதம், இறந்த காப்பீடு பெற்ற நபரின் ஊதியத்தில் நிலையான பயன் விகிதத்தில்(Standard benefit rate) 90% ஆகும். இது சார்ந்தோருக்கு பின்வருமாறு பிரிக்கப்படுகிறது:

1) விதவை :இறப்பு அல்லது மறுமணம் வரை முழு விகிதத்தில் 3/5 பங்கு.
2) விதவைத்தாய்க்கு இறப்பு வரை முழு விகிதத்தில் 2/5 பங்கு
3) ஒவ்வொரு குழந்தைக்கும் 25 வயது அடையும் வரை முழு விகிதத்தில் 2/5 பங்கு
4) திருமணமாகாத மகளுக்கு திருமணமாகும் வரை முழு விகிதத்தில் 2/5 பங்கு
5) மகன் அல்லது மகள் இயலாதவராயின் மற்றும் காப்பீடு பெற்ற நபர் இறக்கும் போது அவரை முழுமையாக சார்ந்திருப்பின், அவர்கள் 25 வயது அடைந்திருந்தாலும் அல்லது திருமணமாகியிருந்தாலும் இப்பலனை தொடர்ந்து பெறலாம்.

மொத்த அனைத்து சார்ந்தோரின் சார்ந்தோருக்கான பயன் ஏதாவதொரு காலத்தில் முழு விகிதத்தை கடந்தால், ஒவ்வொரு சார்ந்தோரின் பயனும் வழங்கப்பட வேண்டிய முழுத் தொகை முழு விகிதத் தொகையைவிட அதிகமாகாதவாறு விகிதாசாரப்படி குறைக்கப்படும். மேற்குறிப்பிட்ட எந்தவொரு சார்ந்தோரையும் இறந்த காப்பீடு பெற்ற நபர் விட்டுச் செல்லவில்லையெனில், அவரது பெற்றோர் 3/10 பங்கு பெறுவர் அல்லது பெற்றோர் உயிருடன் இல்லையெனில் அவரது தந்தைவழி தாத்தா பாட்டிக்கு சார்ந்தோருக்கான பயனின் முழு விகிதத்தில் 3/10 பங்கு பெறுவர்.

37. தினக் கூலி பெறும் தொழிலாளர் அல்லது தற்காலிக தொழிலாளர் முதல் நாளிலேயே அல்லது தனது முதல் பங்களிப்பு காலம் முடிவற்குள் ஏதேனும் ஒரு நாளில் வேலையின் போது ஏற்பட்ட விபத்து காரணமாக காயம் அடைந்தால் தற்காலிக ஊனத்தின் பயன்/நிரந்தர ஊனத்தின் பயன/சார்ந்தொருக்கான பயன் அனுமதிக்கப்படுமா?

தற்காலிக ஊனத்தின் பயன்/நிரந்தர ஊனத்தின் பயன்/சார்ந்தோருக்கான பயன் வழங்கிட தகுதி நிபந்தனைகள் அல்லது பங்களிப்பு நிபந்தனைகள் ஏதும் இல்லை. மேலும் காப்பீடு பெறத்தகுந்த பணியில் சேர்ந்த முதல் நாளிலேயே பணியிடத்தில் விபத்து ஏற்பட்டு காயம் அடைந்தால் இந்த பயன்கள் அனுமதிக்கப்படும்.

38.குடும்ப உறுப்பினா்களுக்கு அனுமதிக்கப்படும் பயன்கள் யாவை?

(i) குடும்ப உறுப்பினா்களும் தேவைப்படும் போது முழு மருத்துவ பராமரிப்பு பெறுவதற்கு தகுதியுடையவா்கள்.
(ii) குடும்ப உறுப்பினா்களும் மருத்துவ சிகிச்சையின் ஒரு பகுதியாக செயற்கை உறுப்புகள், செயற்கை உபகரணங்கள் பெற தகுதியுடையவா்கள்.
(iii) மருத்தவ பயனானது காப்பீடு பெற்ற நபா் வேலையின்மை படி பெறும் போது குடும்பத்திற்கும் அனுமதிக்கப்படுகிறது. இந்த காலத்தில் அவா் இறந்தால், அவரது குடும்பத்திற்கு வேலையின்மை படி வழங்கப்படும் காலம் வரை மருத்துவ பயன்களும் வழங்கப்படும்.
(iv) வேலையின் போது ஏற்படும் விபத்தால் காப்பீடு பெற்ற நபா் இறந்தால், விதவை, அவருடைய விதவைத் தாய் மற்றும் அவரது குழந்தைகள் சான்றோா் பயன் பெற தகுதியுடையவா்கள்.
(v) இறுதிச்சடங்கு செலவுகளுக்காக ரூ.10000/- அவரது குடும்ப உறுப்பினா் அல்லது இறுதிச் சடங்கு செய்யும் நபருக்கு வழங்கப்படுகிறது.

**விதி 61ன் கீழ் காப்பீடு பெற்ற நபருக்கு பணி ஓய்விற்கு பின் வழங்கப்படும் பயன்கள்**

39. ஒரு ஊழியா் பணி ஓய்வு பெற்ற பின்னா் அனுமதிக்கப்படுகிற பயன்கள் யாவை?

ஒரு காப்பீடு பெற்ற நபா் வயது முதிா்ச்சியால் ஓய்வு பெற்றிருந்தாலும் அல்லது தானாக ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றிருந்தாலும் அல்லது அவராகவே முற்பட்டு ஓய்வு பெற்றிருந்தாலும் அவா் ஐந்து வருடங்களுக்கு குறையாத காப்பீடு பெற்ற நபராக இருப்பின், இது தொடா்பான சான்றுகள் சமா்ப்பிக்கும் பொருட்டு அவரும் அவரின் மனைவியும் ஒரு வருடத்திற்கு ரூ.120 என்ற சிறிய பங்களிப்பை செலுத்துவராயின், மருத்துவப் பயன்கள் பெற தகுதியாவாா்கள். காப்பீடு பெற்ற நபா் இறந்துவிட்டால் அவரது மனைவி மருத்துவப் பயன்களை 61வது சட்டத்தின்படி தொடா்ந்து மருத்துவ பயன்கள் பெறுவாா்.

40. ஒரு காப்பீடு பெற்ற நபருக்கு நிரந்தர ஊனத்தால் காப்பீட்டுக்குரிய வேலை நிறுத்தப்படும் போது, அவருக்கு அனுமதிக்கப்படுகிற பயன்கள் என்ன?

ஒரு காப்பீடு பெற்ற நபருக்கு வேலையின் போது ஏற்படுகிற காயத்தால் நிரந்தர ஊனமாகி காப்பீட்டுக்குரிய வேலை நிறுத்தப்படும் போது, அவா் ஆண்டுக்கு 120 ரூபாய் செலுத்துவாராயின் அவரும் அவரது மனைவியும் அவருக்கு நிரந்தர ஊனம் ஏற்படாமல் இருந்தால் அவா் வயது முதிா்ச்சியில் ஓய்வு பெறும் நாள் எந்த நாளோ அந்த நாள் வரை மருத்துவ பயன்கள் பெற தகுதியானவா்கள்.

விதி 60ல் உள்ள தொழில் மறுவாழ்வு திட்டத்தின் படி 45 வயதுக்கு குறைவாக உள்ள காப்பீடு பெற்ற நபருக்கு வேலையின்போது ஏற்பட்ட காயத்தினால் அடைந்த ஊனம் 40%க்கு குறையாமல் இருந்தால் அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் தொழில் மறுவாழ்வு மையத்தில் நெறிமுறைகளின்படி, பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக்காக காப்பீடு பெற்ற நபா் தான் செலவழித்ததை மத்திய அரசின் படியளவின்படியோ அல்லது ஒரு நாளைக்கு 123 ரூபாய் வீதம் எது அதிகமோ அந்த தொகையையும், மேலும் பயிற்சியில் கலந்து கொள்ள போக்குவரத்துக்கு ஆகும்

கட்டணம் சாதாரண விகிதப் படியோ அல்லது பேருந்து/ரயில் இரண்டாம் வகுப்பு கட்டணமோ எது பொருந்துமோ அதனை பெற தகுதியுடையவராகிறார்.

41. சார்ந்திருப்போருக்கான பயன்கள் பெறும் விதவை மருத்துவ பராமரிப்பு பெற தகுதியுடையவரா?

ஆம். சார்ந்திருப்போருக்கான பயன்கள் பெறும் விதவை ஆண்டுக்கு 120 ரூபாய் செலுத்தினால் அவருக்கு மருத்துவ பராமரிப்பு அளிக்கப்படும் என்று கார்ப்போரேஷன், 28.01.2014 மற்றும் 14.02.2014 அன்று நடந்த அதனுடைய 161வது கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

42. ராஜீவ் காந்தி ஷ்ரமிக் கல்யாண் யோஜ்னா என்றால் என்ன?

ராஜீவ் காந்தி ஷ்ரமிக் கல்யாண் யோஜ்னா என்பது பின்வரும் காரணங்களால் வேலையை இழந்த காப்பீடு பெற்ற நபருக்கு வேலையின்மை உதவித்தொகை வழங்க அறிமுகப்படுத்தப்பட்டது. அத்திட்டம் 01.04.2005 அன்று முதல் நடைமுறைக்கு வந்தது.

(i) Industrial Disputes Act, 1947 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்குறைப்பு காரணங்களால்

(ii) Industrial Disputes Act, 1947 ல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்சாலை மூடுதல் காரணங்களால்

(iii) பணியின் போது அல்லாது ஏற்பட்ட காயத்தால் 40 கதவீதத்திற்கு குறையாத நிரந்தர ஊனத்தின் காரணத்தால் அந்த ஊனம், மத்திய அல்லது மாநில அரசால் அமைக்கப்பட்ட மருத்துவக் குழுவால் முறையாக சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இத்திட்டத்தின்படி காப்பீடு பெற்ற நபர், வேலையின்மை உதவித்தொகை பெற அவர் காப்பீடுக்குரிய வேலையில் இரண்டு வருடங்களில் 78 நாட்களுக்கான பங்களிப்பினை ஒவ்வொரு பங்களிப்பு காலத்தின் போதும் செலுத்தியிருக்க வேண்டும். வாழ்நாளில் ஒருவருக்கு 24 மாதங்கள் வேலையின்மை உதவித் தொகை கொடுக்கப்படும். முதல் 12 மாதங்கள் உதவித் தொகை அவர் வேலையில் வாங்கிய சராசரியான தினசரி ஊதியத்தில் 50 சதவீதமும், அதற்குப்பிறது 13 முதல் 24 மாதம் வரை 25 சதவீதமாகவும் வழங்கப்படும்.

காப்பீடு பெற்ற நபர்/காப்பீடு பெற்ற பெண் தொழில் மறுவாழ்வு மையத்தின் நெறிமுறையின் படி அரசு அல்லது அரசு அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் தங்கள் சேர்க்கையை நுழைவு விதிமுறைகளின் படி உறுதிபடுத்த வேண்டும். இ.எஸ்.ஐ. நிறுவனம் அதற்கான முழு கட்டணத்தையும் செலுத்தும். மேலும் AVTI (முதுநிலை தொழிற்பயிற்சி நிறுவனம்)ல் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வதற்கு ஆகும் இரண்டாம் வகுப்பு ரயில்/பேருந்து போக்குவரத்து செலவுகள் (சென்று வர) செய்த தொகை திருப்பிக் கொடுக்கப்படும். காப்பீடு பெற்ற நபருக்கு நடத்தப்படும் அந்த பயிற்சி வகுப்புகள் ஓராண்டு காலம் வரை இருக்கும். காப்பீடு பெற்ற நபரும் அவரது குடும்ப உறுப்பினரும், மருத்துவ பராமரிப்பு பெற தகுதியுடையவர்கள். அதில் மேம்பட்ட சிறப்புச் சிகிச்சை அடங்காது.

## <u>சொற்பொருள் விளக்கம் (முக்கியச் சொற்கள்)</u>

1. இ.எஸ்.ஐ. சட்டத்தின் படி தொழிற்சாலை என்பதற்கான பொருள் விளக்கம் என்ன?

பிரிவு 2(12)ன் கீழ் தொழற்சாலை என்பது பின்வருமாறு விளக்கப்படுகிறது.

ஏதேனும் ஒரு வளாகத்தில் அல்லது அதனை சுற்றியுள்ள பகுதியில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் பணியில் இருந்தால் அல்லது முந்தைய பன்னிரண்டு மாதத்தில் ஏதேனும் ஒரு நாளில் பணியில் இருந்திருந்தால் மற்றும் அதன் ஏதேனும் ஒரு பகுதியில் உற்பத்தி மேற்கொள்வதாயிருந்தால் அல்லது சாதாரணமாக மேற்கொண்டிருந்தால், ஆனால் சுரங்கச் சட்டம் 1952 (Mines Act 1952) (35 of 1952)ன் கீழ் உள்ள சுரங்கங்கள் அல்லது ரெயில்வேயினால் நடத்தப்படும் பணிமனைகள் இதனில் வராது.

2. தொழிற்சாலைக்கான வரையறை கணக்கெடுப்பின் போது இ.எஸ்.ஐ. சட்டத்தின் வரையறைக்குள் வராத தொழிலாளர்களும் கணக்கெடுக்கப்படுவார்களா?

ஆம். தொழிற்சாலை வரையறை கணக்கெடுப்பின் போது, தொழிற்சாலை வளாகத்தின் உள்ளேயும் வளாகத்தை சுற்றியும் பணியமர்த்தப்பட்ட எந்த ஒரு ஊழியரும் ஊதிய சார்பின்றி, பயிற்சி பெறுபவர், தினக்கூலி மற்றும் ஒப்பந்த ஊழியர் என அனைவரும் கணக்கெடுக்கப்படுவார்கள். நிறுவனத்திற்கு தங்கள் சேவையை வழங்கி ஊதியம் பெறும் இயக்குனர்கள் கூட கணக்கெடுக்கப்படுவார்கள்.

3. தொழிற்சாலைக்கான வரையறை கணக்கெடுப்பின் போது எவரெல்லாம் கணக்கிடப்படமாட்டார்கள்?

a) ஊதியம் பெற்றாலும் இல்லையெனினும் ஒரு உரிமையாளர் அல்லது பங்குதாரர்

b) தொழிலாளர்களின் சேவைகளை வழங்கும் ஒப்பந்ததாரர்

c) பணிப் பயிற்சியர் சட்டம் 1961ன் கீழ் பயிற்சி பெறுபவர்

d) சேவைகளுக்காக ஒப்பந்தப்படுத்தப்பட்டுள்ள நபர்கள் (எ.கா. சட்டம், தொழில்நுட்பம், வரி நிபுணர்கள், மற்றும் பிற)

4. வளாகம் என்றால் என்ன?

பிரிவு 2(12) ன் கீழ் உபயோகப்படுத்தப்பட்ட ‘வளாகம்’ மற்றும் ‘எல்லை’ என்பது போதுமான அளவு வரையறுக்கப்படவில்லை. தொழிற்சாலை சட்டம், 1948 ன் கீழ் வரையறுக்கப்பட்டவாறு, வளாகம் என்பது பொதுவான கட்டிடம் அல்லது பணிமனை(shed). அவ்வாறே எல்லை என்பது ஒரு தொடர்ச்சியான உற்பத்தி முறைக்கு சற்று தொலைவில் அமையப்பெற்ற தனித்தனி கட்டிடங்கள் தொடர்ச்சியான உற்பத்திக்கு பயன்படுத்தப்படுமாயின் அவையும் வளாகம் எனப்படும். மேலும் கட்டிடத்தின்/பணிமனையின் அருகில் உள்ள இடங்களும் வளாகம் எனப்படும். வளாகம் என்பது தனி அலகாக மட்டும் இருக்க வேண்டும் என்பதில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட கட்டிடங்கள் அல்லது வெற்று இடம் அல்லது பணிமனையும் வளாகம் எனப்படும்.

5. உற்பத்தி செய்முறை என்றால் என்ன?

உற்பத்தி செய்முறை என்பது தொழிற்சாலை சட்டப் பிரிவு 2(14-AA)ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அா்ததம் உடையது. அது தொழிற்சாலை சட்டத்தின் 2(k) பிரிவின் கீழ் பின்வரும் ஏதேனும் செய்முறையாக வரையறுக்கப்பட்டுள்ளது:

(i) தயாரித்தல், திருத்தியமைத்தல், பழுது பார்த்தல், அலங்காரப்படுத்துதல், முடித்தல், பேக் செய்தல், எண்ணெய் விடுதல், சலவை செய்தல், சுத்தம் செய்தல், உடைத்தல், இடித்தல் மற்றும் ஒரு பொருளை பயன்படுத்த விற்க, இடம்பெயர, கொண்டு சேர்க்க அல்லது அகற்றும் நோக்குடன் பயன்படுத்தினால் அல்லது

(ii) எண்ணெய், தண்ணீா் மற்றும் கழிவு நீா் அல்லது மற்றவற்றை வெளியேற்றுதல் அல்லது

(iii) மின் சக்தியை உற்பத்தி செய்தல், மேம்படுத்துதல் அல்லது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லுதல் அல்லது

(iv) பல வகைகளில் அச்சிடுவதற்காக அச்சுகளை கோர்த்தல் அல்லது புக் பைண்டிங் அல்லது

(v) கட்டுமானப் பணி, மறுகட்டுமானப் பணி, பழுது பார்த்தல், மீண்டும் பொருத்துதல், முடித்தல் அல்லது கப்பல் அல்லது பெரிய படகுகளை உடைத்தல் அல்லது

(vi) பொருட்களை குளிர் சேமிப்புக்கிடங்கில் பதப்படுத்துதல் மற்றும் சேமித்தல் மற்றும்

(vii) இரத்தம் அல்லது முழு மனித இரத்தத்தை சேகரித்தல், பொருத்துதல் மற்றும் பாட்டில்களில் அடைத்து வைத்தல்.

6. நிறுவனத்தை காப்பீடு செய்ய எந்த நபரையெல்லாம் கணக்கிலெடுக்க வேண்டும்?

‘தொழிற்சாலை’ விளக்கத்தின் கீழ் உள்ள ‘வளாகம்’ மற்றும் ‘எல்லை’ ஆகிய வாா்த்தைகள் மாநில அரசுகளால் சட்டத்தின் விதிகளை பிரிவு 1(5) ன் கீழ் நிறுவனங்களுக்கு நீட்டிக்க வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் உபயோகப்படுத்தவில்லை. நிறுவனம் வரையறுக்கப்பட்ட குறைந்த அளவிலான எண்ணிக்கையுடைய நபா்களை வேலையில் அமா்த்தியிருந்தால், வேலைக்கு அமா்த்தப்பட்ட நபா்கள் அனைவரும் ஒரே இடத்தில் வேலை செய்தாலும் அல்லது வெவ்வேறு இடங்களில் வேலை செய்தாலும் அவா்கள் அனைவரும் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பட்ட செயல்முறைகளை செய்வதால், இச்சட்டப்படி கவரேஜ் செய்யப்பட்டதாக ஆகும். எனவே, கிளை அலுவலம், பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் விற்பனை அலுவலகம் ஆகியவை இச்சட்டம் செயல்முறைபடுத்தப்பட்ட பகுதிகளில் அமைந்திருந்தாலும், இல்லையெனினும் இவற்றில் பணி செய்யும் நபா்கள் உட்பட அனைவரும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுவாா்கள்.

7. முதன்மை தொழிலதிபா் எனப்படுபவா் யாா்?

பிரிவு 2(17)ன் படி முதன்மை தொழிலதிபா் என்றால்

(A)தொழிற்சாலை எனில், பின்வரும் நபா்கள்:-

(i) உடமையாளர்

(ii) குடியிருப்பவர்

(iii) உரிமையாளர் அல்லது குடியிருப்பவரின் நிர்வாக முகவர்

(iv) இறந்த உரிமையாளர் அல்லது குடியிருப்பவரின் சட்டபூர்வ பிரதிநிதி

(B) இந்திய அரசின் அல்லது இந்திய அரசின் அதிகாரத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள்

(i) குறிப்பிடப்பட்ட அதிகாரி

(ii) துறைத் தலைவர் (குறிப்பிடப்பட்ட அதிகாரி இல்லையெனில்)

(iii) பிற நிறுவனங்கள் எனில் : நிறுவனத்தை மேற்பார்வையிடும் மற்றும் கட்டுபபடுத்தும் பொறுப்புடைய நபர்.

(iv) கடைகளாக இருந்தால் - I)(a) உடமையாளர் (b) உடமையாளரின் மேலாண்மை II) உரிமையாளர் III) பங்குதாரர்கள் IV) இயக்குனர்கள்

8. இரண்டாம் நிலை தொழிலதிபர் யார்?

பிரிவு 2(13)ன் கீழ், இரண்டாம் நிலை தொழிலதிபர் பின்வருவனவற்றில் எவராவது அல்லது அனைவரும் :

(i) இச்சட்டம் பொருந்தும் முதன்மை தொழிலதிபரின் தொழிற்சாலை அல்லது நிறுவனத்தின் வளாகத்தில் ஏதாவதொரு வேலையை செயல்படுத்துபவர் அல்லது முதன்மை தொழிலதிபரின் மேற்பார்வையில் அல்லது அவரது முகவரின் மேற்பார்வையில் முதன்மை தொழிலதிபரின் ஏதேனும் ஒரு வேலையின் முழு அல்லது பகுதி வேலையை செயல்வடுத்துபவர் அல்லது எடுக்கப்பட்டிருக்கும் வேலையை துவங்குவதற்கு முன் அல்லது இடையில் ஏதேனும் ஒரு வேலையை அதேபோன்ற தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்காக செய்பவர் அல்லது எவர் மூலமாக தொழிலாளி ஒப்பந்தப்படுத்தப்பட்டுள்ளாரோ அல்லது ஒப்பந்தந்தத்தால் தொழிலாளிகளை முதன்மை தொழிலதிபருக்கு அளிப்பவர் (ஒப்பந்ததாரர் உட்பட)

(ii) ஒரு தொழிற்சாலை அல்லது நிறுவனத்தின் வேலையை வளாகத்திற்கு வெளியே முதன்மை தொழிலதிபர் அல்லது அவரது முகவரின் மேற்பார்வையில் செய்பவர்

(iii) முதன்மை தொழிலதிபரின் தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கு தனது தொழிலாளிகளை வாடகைக்கு அனுப்புபவர் மற்றும்

(iv) சட்டத்தின் 2(13) ன் கீழ் ஒப்பந்ததாரர்.

9. தொழிலாளி என யாரையெல்லாம் வரையறுக்கலாம்?

பிரிவு 2(9)ன் கீழ் தொழிற்சாலை அல்லது நிறுவனம் மற்றும் அதனோடு தொடர்புடைய வேலையை ஊதியத்திற்காக செய்பவர் மற்றும்

தொழிற்சாலை அல்லது நிறுவனத்தின் ஏதேனும் ஒரு வேலைக்காக வளாகத்தினுள் அல்லது வேறெங்கேனும் அல்லது நிர்வாகம், மூலப் பொருட்கள் வாங்குதல், விற்பனை அல்லது தயாரிப்புகளை விநியோகித்தல் இவற்றை கையாளும் ஏதெனும் பகுதி, துறை, அல்லது கிளை போன்றவற்றில் முதன்மை தொழிலதிபரால் நேரிடையாக பணியமர்த்தப்பட்டவர்.

இரண்டாம் நிலை தொழிலதிபரின் தொழிலாளிகள்

தொழிற்சாலை அல்லது நிறுவனத்தின் ஏதேனும் ஒரு வேலைக்காக வளாகத்தினுள் பணியமர்த்தப்பட்டவர்

தொழிற்சாலை அல்லது நிறுவனத்தின் முதன்மை தொழிலதிபர் அல்லது அவரது முகவரின் மேற்பார்வையில் செய்யப்படும் ஏதேனும் ஒரு வேலைக்காக வளாகத்தின் வெளியே பணியமர்த்தப்பட்டவர்

முதன்மை தொழிலதிபரின் தொழிற்சாலை அல்லது நிறுவனத்தில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் கூலிக்காக பணி செய்யும் தொழிலாளிகள் அல்லது ஒப்பந்த தொழிலாளர்/தொழிற்பண்பட்டவர்.

கம்பெனியின் ஊதியம் பெறும் இயக்குனர்கள்

விலக்குகள் : (1) பணி பயற்சியர் சட்டம் 1961 ன் கீழ் பயிற்சி பெறுபவர்கள் (2) மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய உச்ச வரம்புக்கு மேல் ஊதியம் பெறும் தொழிலாளர்கள். ஒப்பந்த சேவைகளுக்கு சேவைகள் வழங்கும் தொழிலாளர்/ தொழிற்பண்பட்டவர்

10. தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படுவதற்கு ஊதிய உச்சவரம்பு என்ன?

01.01.2017 முதல் இத்திட்டத்தின் கீழ் வருவதற்கான ஊதிய உச்சவரம்பு ரூ.21000 ஆகும்

எனினும், 01.04.2016 முதல் ஊனமுற்ற தொழிலாளாருக்கு ஊதிய உச்ச வரம்பு இல்லை.

11. 'சராசரி தினசரி ஊதியம்' என்றால் என்ன?

சராசரி தினசரி ஊதியம் (மத்திய விதி)

1(A) "சராசரி தினசரி ஊதியம" என்பது காப்பீடு பெற்ற நபருக்கு அந்த காலத்தில் வழங்கப்படும் மொத்த ஊதியத்தை அந்த ஊதியம் வழங்கப்படும் நாட்களின் எண்ணிக்கையால் வகுக்க கிடைக்கும் தொகை ஆகும்.

12. 'விலக்களிக்கப்பட்ட தொழிலாளி' என்பவர் யார்?

தொழிலாளிக்கான பங்கினை எந்த தொழிலாளர் செலுத்த வேண்டியதில்லையோ அவரே விலக்களிக்கப்பட்ட தொழிலாளர் ஆவார். 14.06.2016 முதல் விலக்குக்கான வரம்பு ஒரு நாளைக்கு ரூ.137 ஆகும். எனினும், இந்த ஊதியத்துக்கான தொழிலதிபருக்கான பங்களிப்பை செலுத்த வேண்டும்.

13. பங்களிப்பு காலம் மற்றும் பயன் காலங்கள் என்றால் என்ன?

ஏப்ரல் முதல் மார்ச் வரை உள்ள நிதி ஆண்டு இரண்டு பாதியாக ஆறு மாதகால பங்களிப்பு காலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது முதல் பாதி ஏப்ரல் 1ந் தேதி முதல் செப்படம்பர் 30ந் தேதி வரை மற்றும் இரண்டாம் பாதி அக்டோபர் 1ந் தேதி முதல் அடுத்த ஆண்டு மார்ச் 31 ந் தேதி வரையும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பங்களிப்புக் காலத்தின் சம்பந்தப்பட்ட பயன் காலம் என்பது அந்த பங்களிப்பு காலம் முடிந்தவுடன் மூன்று மாதங்களுக்குப் பிறகு துவங்கும் அதாவது ஜனவரி முதல் ஜுன் மற்றும் ஜுலை முதல் டிசம்பர் வரை. (ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலண்டர் வருடம் இரண்டு ஆறு மாத கால பயன் காலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.)

**ஊதியம்**

14. இ.எஸ்.ஐ. பங்குத் தொகை கட்டுவதற்கான ஊதியம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊதியக் கூறுகள் ஒருவர் பெறும் ஊதியத்தலிருந்து அவரின் இ.எஸ்.ஐ. பங்குத் தொகை கணக்கிட எடுத்துக் கொள்ளப்படுகின்றன:

அ) அடிப்படை ஊதியம்

ஆ) பஞ்சப்படி/வீட்டு வாடகைப் படி/நகர்ப்புற பணிக்கான படி/கூடுதல் நேர வேலைக்கான படி/அலுவல்முறை படி/இரவு நேர வேலைக்கான படி/திறன்சார்ந்த படி/ வெப்ப, வாயு மற்றும் தூசிப் படி/கல்விப் படி/உணவு மற்றும் தேநீர் படி/பயணப்படி/ கூடுதல் பணி நேரத்திற்கான ஊதியம்(இது இ.எஸ்.ஐ. வரையறைக்குள் வருவதற்கு கணக்கிடப்படக் கூடாது.)

இ) ஊதியம் /சம்பளம்/வார விடுமுறை மற்றும் அரசு விடுமுறைக்கான ஊதியம்

ஈ) விற்பனை பணியாளர்களுக்கு வழங்கப்படும் கமிஷன்

உ) பணி இடைநீக்கம் செய்யப்பட்ட ஊழியருக்கு கொடுக்கப்படும் வாழ்வாதாரப் படி

ஊ) வருகைக்கான போனஸ் அல்லது ஊக்கத்தொகை அல்லது வருகைக்காக வழங்கப்படும் ஊக்கத்தொகை அல்லது உற்பத்தி ஊக்கத்தொகை

எ) வழக்கமான மதிப்பூதியம் அல்லது இயக்குனர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் அல்லது ஊதியம்

ஏ) இயங்கும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கலெக்ஷன் பாட்டா, உற்பத்தி ஊக்கத்தொகை, சட்டபூர்வ போனஸ் அல்லாத பிற போனஸ்கள், இரவு நேர வேலைக்கான படி, சூடு, வாயு மற்றும் தூசிப் படி, சாப்பாடு/உணவு படி

ஐ) விடுமுறை ஊதியத்திற்காக வழங்கப்பட்ட தொகை, பணி இடைநிறுத்த கால ஊதியம் மற்றும் வேலை நிறுத்த காலத்திற்கு வழங்கப்பட்ட ஊதியம்

ஒ) வேலைக்கான ஒப்பந்த விதிமுறைகளில் கூறப்பட்டுள்ள அல்லது சொல்லப்பட்டுள்ளவை நிறைவேற்றப்படுமானால், ரொக்கமாக கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்படவுள்ள இதர பிற ஊதியங்கள்.

மேலே உள்ளவை குறிப்புகள் மட்டுமே.

15. பங்குத் தொகை என்பது என்ன?

முதன்மை தொழிலதிபர், இ.எஸ்.ஐ.சட்டம் பிரிவு 2(4) படி, அவர்தம் தொழிலாளியின் சார்பிலும் அவரது சார்பிலும் செலுத்த வேண்டிய அனைத்து கட்டணமும் பங்குத் தொகையாகும்.

16. தற்போதைய பங்களிப்புத் தொகையின் விகிதம் என்ன?

தொழிலதிபரின் பங்களிப்பு : தொழிலாளருக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியத்தில் 4.75%- த்திற்கு சமமான தொகை. இது அடுத்த முழுமையான ரூபாயாக மாற்றப்பட வேண்டும்.

தொழிலாளரின் பங்களிப்பு : தொழிலாளருக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியத்தில் 1.75%- த்திற்கு சமமான தொகை. இது அடுத்த முழுமையான ரூபாயாக மாற்றப்பட வேண்டும்.

06.01.2016 அன்று அரசிதழில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, இச்சட்டம் முதன்முறையாக செயல்படுத்தப்பட்ட பகுதிகளில் முதல் 24 மாதங்களுக்கு தொழிலதிபர் மற்றும் தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதம் செயல்படுத்தப்பட்ட தேதியிலிருந்த பின்வருமாறு கணக்கிடப்பட வேண்டும்:-

(a) தொழிலதிபரின் பங்களிப்பு - தொழிலாளருக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியத்தில் 3%-திற்கு சமமான தொகை (இது அடுத்த முழுமையான ரூபாயாக மாற்றப்பட வேண்டும்).

(b) தொழிலாளரின் பங்களிப்பு - தொழிலாளருக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியத்தில் 1%-திற்கு சமமான தொகை (இது அடுத்த முழுமையான ரூபாயாக மாற்றப்பட வேண்டும்).

17. உடல் நலக்குறைவுக்கான பயன் என்றால் என்ன?

காப்பீடு பெற்ற நபருக்கு மருத்துவ சிகிச்சையும், பராமரிப்பும் தேவைபபடும் பொழுது மற்றும் மருத்துவ அடிப்படையில் வேலைக்கு விடுப்பு எடுக்க வேண்டியிருந்தால், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ அதிகாரியால் சான்றளிக்கப்பட்ட விடுப்பு காலத்திற்கு, இரண்டு பங்களிப்பு காலங்களில் (ஒரு வருடம்) 91 நாட்களுக்கு மிகாமல், தொடர்புடைய பங்களிப்பு காலத்தில் 78 நாட்களுக்கு குறையாமல் பங்களிப்பு செலுத்தியிருந்தால், அவரது சராசரி பயன் விகிதத்தில் 70% தொகை உடல் நலக்குறைவுக்கான பயனாக வழங்கப்படும்.

18. நீண்டகால உடல்நலக்குறைவுக்கான பயன்?

இந்த பயன், இ.எஸ்.ஐ. சட்டத்தின் பிரிவு 99-ஐ பயன்படுத்தி கார்ப்பரேஷனால் வழங்கப்படும் கூடுதல் உடல் நலக்குறைவுக்கான பயனாகும். காப்பீடு பெற்ற தொழிலில் இரண்டு ஆண்டுகள் நிறைவு செய்த காப்பீடு பெற்ற நபர், இந்த காலத்தில் 156 நாட்களுக்கு குறையாமல் பங்களிப்பு செலுத்தியிருந்தால் குறிப்பிடப்பட்டுள்ள 34 நீண்ட கால நோய்களுக்காக 309 நாட்களுக்கு நீண்டகால உடல்நலக்குறைவுக்கான பயன்பெற தகுதியுடையவராகின்றனர். இந்த காலமானது 730 நாட்கள் அல்லது காப்பீடு

பெற்ற நபர் 60 வயது எட்டும் வரை இவற்றில் எது முன் வருமோ அதுவரை நீட்டிக்கப்படலாம். காப்பீடு பெற்ற நபரும் அவரது குடும்பமும் இந்த நீட்டிக்கப்பட்ட காலத்தில் மருத்துவப் பயன்கள் பெறவதற்கு தகுதியுடையவர்களாகின்றனர். இந்த நீண்டகால உடல்நலக்குறைவுக்கான தினசரி பயன் விகிதம் சராசரி பயன் விகிதத்தின் 80% ஆகும்.

19. மேம்படுத்தப்பட்ட உடல்நலக்குறைவுக்கான பயன் என்றால் என்ன?

சிறு குடும்ப முறையை அபிவிருத்தி செய்வதற்காக, இந்த பணப்பயன் டியுபக்டமி மற்றும் வாசக்டமி செய்யப்பட்ட காப்பீடு பெற்ற நபருக்கு வழங்கப்படுகிறது. வாசக்டமி செய்பவர்களுக்கு 7 நாட்களுக்கும் டியுபக்டமி செய்பவர்களுக்கு 14 நாட்களுக்கும் இப்பயன் அளிக்கப்படும். அறுவை சிகிச்சைக்குப் பின் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் இந்த கால வரையறையானது மேலும் நீட்டிக்கப்படலாம். இந்த மேம்படுத்தப்பட்ட உடல் நலக்குறைவுக்கான தினசரி விகிதமானது சராசரி பயன் விகிதத்திற்கு சமமாகும்.

20. ஊனம் என்றால் என்ன?

ஊனம் என்பது வேலை நிமித்தத்தின் போது ஏற்படும் விபத்துகளால் காப்பீடு பெற்ற தொழிலாளர் தற்காலிகமாக வேலை செய்ய இயலாமல் போகச் செய்வதும் மற்றும் மருத்ததுவ சிகிச்சை தேவைப்படும் காயங்கள் (தற்காலிக ஊனம்). இது அவரது வருவாய் ஈட்டும் திறனை குறைக்கிறது (நிரந்தர பகுதி ஊனம்) அல்லது இது காப்பீடு பெற்ற நபரை எந்த ஒரு வேலையும் செய்ய முடியாமல் தடுக்கிறது (நிரந்தர முழுமையான ஊனம்).

21. வேலையின் போது ஏற்படும் காயம் என்றால் என்ன?

இது தொழிலாளருக்கு இந்தியாவின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காப்பீடு பெற்ற தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது விபத்து அல்லது தொழில்சார் நோய்களால் ஏற்பட்ட காயங்களைக் குறிக்கும்.

22. தொழில்சார் நோய்கள் என்றால் என்ன?

இச்சட்டத்தின் அட்டவணை III - பகுதி A, B அல்லது Cல் பட்டியலிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தொழில் துறையில் குறிப்பிட்ட காலம் பணியில் இருக்கும் போது நோய் தொற்று ஏற்பட்டால் அது தொழில்சார் நோய் எனப்படுகிறது. தொழில்சார் உடல்நலக் கோளாறுகள் இரண்டு முக்கிய வகைகளாக இருக்கலாம். குறைந்த காலத்தில் கடுமையான பின்விளைவு ஏற்படுத்தக் கூடிய அதாவது தொழிற்சாலை சூழலில் அதிக அளவிலான நச்சுத்தன்மை கொண்ட பொருள் கலந்திருப்பதால் ஏற்படும் கடுமையான நச்சுத்தன்மை மற்றும் மற்றொன்று மீண்டும் மீண்டும் அல்லது தொடர்ந்து நச்சுத் தன்மை கொண்ட பொருளுக்கு உள்ளாதல் என்பனவாகும்.

23. 'தற்காலிக ஊனத்தின் பயன்' என்றால் என்ன?

வேலை செய்யும்போது நேரிடும் விபத்துகளால் ஏற்பட்ட ஊனத்தால் பாதிக்கப்பட்ட காப்பீடு பெற்ற நபர், தனது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ அதிகாரியால் சான்றளிக்கப்பட்ட விடுப்பு காலத்திற்கு அளிக்கப்படும் தொகையாகும். இது தற்காலிக ஊனம் சரியாகும் வரை மற்றும் தொழிலாள பணியில் திரும்ப சேரும் வரை சராசரி பயன் விகிதத்தில் 90%-ஆக வழங்கப்படுகிறது.

24. நிரந்தர ஊனத்திற்கான பயன் என்றால் என்ன?

பணியின் போது நேரிட்ட விபத்து காரணமாக நிரந்தர தன்மை கொண்ட ஊனம் ஏற்பட்டால், காப்பீடு பெற்ற நபர், அவரது ஊதியம் ஈட்டக்கூடிய திறனில் ஏற்பட்ட இழப்பு மற்றும் அதன் விகிதத்தை மதிப்பிடுவதற்காக மருத்துவ குழுவால் பரிசோதிக்கப்படுவார். அவரது ஊனத்தின் பயனுக்கான முழு தினசரி விகிதத்தில் இந்த குறிப்பிட்ட சதவீதத்தில், தற்காலிக ஊனத்தின் பயன் நிறுத்தப்பட்ட நாளிலிருந்து அவரது வாழ்நாள் முழுவதும் மாதாமாதம் வழங்கப்படும்.விலைவாசி ஏற்றத்திற்கு ஏற்ப அவ்வப்போது நிரந்தர ஊன உதவித்தொகை அளவும் அதிகரிக்கப்படும். இந்த பயனானது ECS மூலமாக காப்பீடு பெற்ற நபரின் வங்கிக் கணக்கிலோ அல்லது Corporation செலவில் மணி ஆர்டராகவோ வழங்கப்படும். காப்பீடு பெற்ற நபரின் PDBன் தினசரி விகிதம் 10 ரூபாய்க்கு மிகாமல் இருந்தாலோ அல்லது 10 ரூபாய்க்கு மேல் இருந்து தொகுக்கப்பட்ட தொகை 60000 ரூபாய்க்கு மிகாமல் இருந்தால் அவர் உதவித்தொகையை மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

25. சார்ந்தோருக்கான பயன் என்றால் என்ன?

சார்ந்தோர் பயன் என்பது, பணியின் போது நேரிட்ட விபத்து அல்லது தொழில்சார் நோயால் இறந்த காப்பீடு பெற்ற நபரின் தகுதியுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு மாதாமாதம் வழங்கப்படும் ஓய்வூதியமாகும். முதல் பயன் தொகை கிளை அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அடுத்தடுத்த மாத பயன் தொகைகள் நேரடி வங்கி மாற்றம் (Direct Bank Transfer) மூலமாக பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

26. மகப்பேறு பயன் என்றால் என்ன?

மகப்பேறுகால பயன் என்பது பிரசவம், கருச்சிதைவு அல்லது கருவுற்றிருக்கும் போது ஏற்படும் உடல் நலக்குறைவு, குறைமாத பிரசவம் ஆகியவற்றால் பணிக்கு செல்ல முடியாத காலங்களுக்கு காப்பீடு பெற்ற பெண்ணுக்கு வழங்கப்படும் பயனாகும். மகப்பேறு பயனுக்கான விகிதம் நிலையான சராசரி பயன் விகிதத்திற்கு சமமானதாகும்.

20.01.2017 முதல் வாடகைத் தாய் முறையில் குழந்தைப் பெற்ற பெண்ணிற்கும் (Commissioning mother) (அதாவது வேறு ஒரு பெண்ணிடம் கருவை தந்து குழந்தை பெற்றுக் கொள்பவர்) மற்றும் சட்டபூர்வமாக 3 மாதத்திற்கும் குறைவான வயதுடைய குழந்தையை சட்டபூர்வமாக தத்தெடுத்துக் கொண்ட காப்பீடு பெற்ற பெண்ணிற்கும், மகப்பேறு பயனானது நீட்டிக்கப்பட்டுள்ளது.

27. பிரசவம் (Confinement) என்றால் என்ன? பிரசவத்திற்கு மகப்பேறு பயனானது எத்தனை நாட்கள் வழங்கப்படும்?

பிரசவம் என்பது உயிருடன் குழந்தையை பிரசவிப்பது அலலது 26 வார கா்ப்பகாலத்திற்குப்பின் உயிருள்ள அல்லது இறந்த குழந்தையை பிரசவிப்பது.

மகப்பேறு பயனானது முதல் இரண்டு உயிருள்ள குழந்தை பிறந்தால், அப்பிரசவங்களுக்கு 26 வாரங்களுக்கும் மற்றும் அதற்கடுத்து உயிருள்ள குழந்தை பிறக்கும் பிரசவத்திற்கு 12 வாரங்களும், பிரசவத்திற்கு முந்தைய ஒன்று அல்லது இரண்டு பங்களிப்புக் காலங்களில் 70 நாட்களுக்கு குறையாமல் பங்களிப்பு செய்திருந்தால் வழங்கப்படும். எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதிக்கு எட்டு வாரங்களுக்கு

முன்புள்ள காலத்திலிருந்தோ அல்லது பிரசவத்திற்கு பிறகோ நிபந்தனைகள் மற்றும் காப்பீடு பெற்ற பெண்ணின் தேவைக்கேற்ப மகப்பேறு பயனைக் கோரலாம்.

இந்த விதிமுறைகள் காப்பீடு பெற்ற பெண் 20.01.2017க்கு பிறகு குழந்தை பெற்றிருந்தாலோ அல்லது எதிர்பார்த்த பிரசவம் எதிர்பார்க்கப்படும் தேதி 20.01.2017 அல்லது அதற்கு பிறகுள்ள தேதியாக இருந்தால் பொருந்தும்.

வாடகைத் தாய் முறையில் குழந்தையை பெற்ற தாய் அல்லது குழந்தையை தத்தெடுத்த தாயாக இருந்தால், தாயிடம் குழந்தை ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து, காப்பீடு பெற்ற பெண்ணிற்கு 12 வாரங்களுக்கு மகப்பேறு பயன் வழங்கப்படுகிறது.

28. கருச்சிதைவு என்றால் என்ன? கருச்சிதைவிற்கான பயன் எவ்வளவு காலம் வழங்கப்படும்?

கருச்சிதைவு என்பது பிரசவ காலத்தின் 26வது வாரத்தின் போது அல்லது அதற்கு முன்பான எந்தவொரு நேரத்திலும் கருவை கர்ப்பப்பையில் இருந்து வெளியேற்றுவது. ஆனால் இதில் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கத் தகுந்த காரணியால் ஏற்படும் கருச்சிதைவு வராது. பங்களிப்புக்கான நிபந்தனைகளுக்குட்பட்டு கருச்சிதைவுக்கான மகப்பேறு பயன் கருச்சிதைவுற்ற நாளுக்கு அடுத்த நாளிலிருந்து 6 வாரங்கள் (42 நாட்கள்) அளிக்கப்படுகிறது.

29. கர்ப்பகாலத்தில் தோன்றும் உடல் நலக்குறைவு என்றால் என்ன? இதற்கு மகப்பேறு பயன் எவ்வாளவு காலம் அனுமதிக்கப்படும்?

காப்பீடு பெற்ற பெண், கர்ப்ப காலத்தில் தோன்றும் உடல் நலக்குறைவு, கருச்சிதைவு, குறைமாதப் பிரசவம் அல்லது பிரசவம் ஆகியவற்றால் ஏற்பட்ட உடல் நலக்குறைவிற்கு மருத்துவ சிகிச்சை மற்றும் விடுப்பு எடுக்க வேண்டியிருந்து, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ அதிகாரியால் சான்றளிக்கப்பட்டிருந்தால், மகப்பேறு பயன் ஒரு மாத காலத்திற்கு வழங்கப்படும்.

30. பிரசவத்திற்கான மருத்துவ செலவீட்டுத் தொகை என்றால் என்ன?

இ.எஸ்.ஐ. திட்ட வசதிகள் இல்லாத இடங்களில் காப்பீடு பெற்ற பெண்ணின் அல்லது காப்பீடு பெற்ற நபரின் மனைவியின் பிரசவம் நடந்தால் வழங்கப்படும் மொத்த தொகை பிரசவத்திற்கான மருத்துவ செலவீட்டுத் தொகை எனப்படும். தற்போது 01.10.2013 முதல் பிரசவத்திற்கான மருத்துவச் செலவீட்டுத் தொகை Rs.5000/- வழங்கப்படுகிறது. இது முதல் இரண்டு பிரசவங்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

31. இறுதிச் சடங்கு செலவு என்பது என்ன? யாருக்கு வழங்கப்படும்?

காப்பீடு பெற்ற நபர் இறந்துவிட்டால் அவரது இறுதிச்சடங்கு செலவு ரூ.10000/-க்கு மிகாமல் அவரது குடும்ப உறுப்பினரில் மூத்தவருக்கு வழங்கப்படும். காப்பீடு பெற்ற நபர் இறக்கும் போது, அவருக்கு குடும்பம் இல்லையெனில் அல்லது குடும்பத்துடன் வசிக்கவில்லையெனில், இறுதிச் சடங்கு செய்யும் நபருக்கு இத்தொகை வழங்கப்படுகிறது.

32. சராசரி பயன் விகிதம் என்றால் என்ன?

சராசரி பயன் விகிதம் என்பது பங்களிப்பு காலத்தில் செலுத்தப்பட்ட மொத்த ஊதியத்தை ஊதியம் செலுத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கையால் வகுக்கும் போது கிடைக்கும் சராசரி தினசரி ஊதியமாகும்.

இ.எஸ்.ஐ.-சி வழங்கும் பயன்களின் பட்டியல் விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன்:

| வ. எண். | பயனின் பெயர் | பங்களிப்பு நிபந்தனைகள் | பயன் காலம் | விகிதம் /பயன் வகை/கருத்துகள் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவ பயன்கள் | இ.எஸ்.ஐ. சட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற நபராக இருத்தல் வேண்டும். காப்பீடு பெற்ற நபர்/குடும்பத்தினர் காப்பீடு பெற்ற வேலையில் சேர்ந்த முதல் நாளிலிருந்து தகுதியுடையவர்கள் | காப்பீடு பெற்ற வேலையில் சேர்ந்த முதல் நாளிலிருந்து காப்பீடு செய்யப்பட்ட வேலையில் இருக்கும் வரை மற்றும் ஏற்புடைய பயன் காலம் வரை | காப்பீடு பெற்ற நபருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தேவையான மருத்துவ பராமரிப்பு, விரிவான மருத்துவ பராமரிப்பு மற்றும் மருத்துவ சோதனைகள் |
| 1(a) | ஓய்வுபெற்ற காப்பீடு பெற்ற நபருக்கு விதி 60ன் கீழ் மருத்துவ பராமரிப்பு | வேலையின் போது நேரிட்ட விபத்தினால் காயம் அடைந்து நிரந்தன ஊனம் ஏற்பட்டு காப்பீடு பெற்ற பணி இழந்தவர் ரூ.120 செலுத்துவதன் மூலம் தனக்கும் தனது துணைக்கும் பெறலாம் | வருடாந்திர அடிப்படையில் | காப்பீட்டாளருக்கும் அவரது துணைக்கும் பணி மூப்புக்கான வயதை அடையும் வரை முதன்மை மற்றும் இரண்டாம் நிலை மருத்துவ வசதிகள் (அதி உன்னத மருத்துவ சிகிச்சை நீங்கலாக) இ.எஸ்.ஐ. மருத்துவ நிறுவனங்களில் மட்டும். |
| 1(b) | ஓய்வுபெற்ற காப்பீடு பெற்ற நபருக்கு விதி 61ன் கீழ் மருத்துவ பராமரிப்பு | காப்பீடு பெற்ற பணியிலிந்து விலகும் போது (பணி மூப்புக்கான வயதை அடைந்ததால் அல்லது விருப்ப ஓய்வு பெற்றதால் அல்லது 5 வருடங்களுக்கு குறையாமல் காப்பீடு பெற்றவர் முன்கூட்டியே தானாகவே ஓய்வு பெற்றால், ரூ.120 செலுத்துவதன் மூலம் தனக்கும் தனது துணைக்கும் பெறலாம் | வருடாந்திர அடிப்படையில் | காப்பீட்டாளருக்கும் அவரது துணைக்கும் வாழ்நாள் முழுவதும் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை மருத்துவ வசதிகள் (அதி உன்னத மருத்துவ சிகிச்சை நீங்கலாக) இ.எஸ்.ஐ. மருத்துவ நிறுவனங்களில் மட்டும். இறந்த காப்பீடு பெற்ற நபரின் மனைவிக்கும் இப்பயன் வழங்கப்படுகிறது. |
| 2 | உடல் நலக்குறைவுக்கான பயன் | சம்பந்தப்பட்ட பங்களிப்பு காலத்தில் 78 நாட்களுக்கு குறையாமல் பங்களிப்பு செலுத்தி இருக்க வேண்டும். | உடல் நலம் குறைந்திருந்தால் இரு தொடர்ந்த பயனீட்டு காலத்தில் 91 நாட்கள் இப்பயன் கிடைக்கும் | சராசரி தினசரி ஊதியத்தில் 70% |
| 2(b) | மேம்படுத்தப்பட்ட உடல் நலக்குறைவுக்கான பயன் | உடல் நலக்குறைவுக்கான பயன் போன்றதே | காப்பீடு பெற்ற நபருக்கு வாசக்டமி செய்திருந்தால் 7 நாட்களும் காப்பீடு பெற்ற பெண்ணுக்கு டியுபெக்டமி செய்திருந்தால் 14 நாட்களும் வழங்கப்படும். | சராசரி தினசரி ஊதியத்தில் 100% |
| 3 | நீட்டிக்கப்பட்ட உடல் நலக்குறைவுக்கான பயன் | 4 பங்களிப்பு காலங்களில் குறைந்தபட்சம் 156 நாட்கள் பங்களிப்பு மற்றும் இதனுள் ஏதேனும் ஒரு பங்களிப்பு காலத்தில் உடல் நலக்குறைவுக்கான பயன் பெறுவதற்கான தகுதி பெற்றிருத்தல் வேண்டும். | 124 முதல் 309 நாட்கள் வரை. இது நீண்ட கால நோய்களுக்கு குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவ அறிவுரையின்படி 2 வருடங்களுக்கு (730 நாட்கள்) நீட்டிக்கப்படும் | சராசரி தினசரி ஊதியத்தில் 80% |
| 4 | ஊனத்தின் பயன் | | | |
| 4(a) | தற்காலிக ஊனத்தின் பயன் | காப்பீடு பெற்ற வேலையில் வேலையின் போது நேரிட்ட | 1. ஊனமானது 3 நாட்களுக்கும் (விபத்து | விபத்து நடந்த பங்களிப்பு காலம் மாதம் நாள் |

| வ. எண். | பயனின் பெயர் | பங்களிப்பு நிபந்தனைகள் | பயன் காலம் | விகிதம் /பயன் வகை/கருத்துகள் |
|---|---|---|---|---|
| | | விபத்தால் ஏற்பட்ட காயம் எனில் காப்பீடு பெற்ற வேலையில் சேர்ந்த முதல் நாளிலிருந்து எந்த நிபந்தனையும் இல்லை. | நடந்த தேதியை தவிர்த்து) குறைவாக இருந்தால் பயன் வழங்கப்படாது.<br>2. மற்ற வகையில் தற்காலிக ஊனம் தீரும் வரை உள்ள மொத்த காலமும் வழங்கப்படும். | ஆகியவற்றில் அளிக்கபட்ட சராசரி தினசரி ஊதியத்தில் 90% |
| 4(b) | நிரந்தர ஊனத்தின் பயன் | 1. பங்களிப்பு நிபந்தனை ஏதும் இல்லை.<br>2. காப்பீடு பெற்ற வேலையில் வேலையின் போது நேரிட்ட விபத்தால் ஏற்பட்ட முழு அல்லது பகுதி நிரந்தர ஊனத்திற்கு வழங்கப்படுகிறது. | வேலையின் போது நேரிட்ட விபத்து காரணமாக ஏற்பட்ட வருவாய் ஈட்டும் திறனை இழந்த சதவீதம் மருத்துவ குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கு இணையாக மாதாமாதம் பணம் வழங்கப்படும். | 1. தற்காலிக ஊனத்திற்கு வழங்கப்படும் விகிதத்தில் மொத்த தொகையில் சதவீதத்தைப் பொறுத்து வழங்கப்படும்.<br>2. தினசரி பயன் விகிதம் 10 ரூபாய் வரை இருந்தால் அல்லது தொகுக்கப்பட்ட தொகை 60000 ரூபாய்க்கு மிகாமல் இருந்தால் அவர் உதவித்தொகையை மொத்தமாக பெற்றுக்கொள்ளலாம். |
| 5(a) | சார்ந்தோருக்கான பயன் | எந்த நிபந்தனையும் இல்லை. காப்பீடு பெறத்தக்க வேலையில் சேர்ந்த முதல் நாளிலிருந்து மற்றும் காப்பீடு பெறத்தக்க வேலையில் இருக்கும்போது இறப்பு ஏற்பட்டால் | விதி 58ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள “வேலையின் போது நேரிட்ட விபத்தால் காப்பீடு பெற்ற நபர் இறந்தால் சார்ந்தோருக்கு வழங்கப்படுகிறது. விதவைக்கு வாழ்நாள் முழுவதும் அல்லது மறுமணம் புரியும் வரையிலும் மற்றும் ஒவ்வொரு சட்டபூர்வ அல்லது தத்தெடுக்கப்பட்ட மகனுக்கு 25 வயது வரையிலும். சட்டபூர்வ அல்லது தத்தெடுக்கப்பட்ட மகளுக்கு 25 வயதை அடையும் வரை அல்லது திருமணம் வரையிலும் எது முன்பு நிகழுமோ அது வரை. இயலாத குழந்தைகளுக்கு இயலாமை மறையும் வரை. | நிலையான விகிதாசாரப்படி சார்ந்தோருக்கு சராசரி தினசரி ஊதியத்தில் 90% |
| 5(b) | சார்ந்தோருக்கான பயன்பெறும் விதவைக்கு மருத்துவ பராமரிப்பு | சார்ந்தோருக்கான பயன்பெறும் விதவைக்கு | வருடாந்திர அடிப்படையில் | முதன்மை மற்றும் இரண்டாம் நிலை மருத்துவ வசதிகள் (அதி உன்னத மருத்துவ சிகிச்சை நீங்கலாக) இ.எஸ்.ஐ. மருத்துவ நிறுவனங்களில் மட்டும் வருடத்திற்கு ரூ.120 |

| வ. எண். | பயனின் பெயர் | பங்களிப்பு நிபந்தனைகள் | பயன் காலம் | விகிதம் /பயன் வகை/கருத்துகள் |
|---|---|---|---|---|
| | | | | செலுத்துவதின் மூலம் சார்ந்திருப்போருக்கான பயன்பெறு பட்சத்தில் இறந்த காப்பீடு பெற்ற நபரின் மனைவிக்கு வழங்கப்படும். |
| 6 | மகப்பேறு பயன்கள் | முந்தைய ஒன்று அல்லது இரண்டு தொடர்ச்சியான பங்களிப்பு காலங்களில் 70 நாட்கள் பங்களிப்பு கட்டியிருந்தால் | முதல் இரண்டு உயிருள்ள குழந்தைகளுக்கு 26 வாரங்கள் மற்றும் மூன்றாவது உயிருள்ள குழந்தை முதல் 12 வாரங்கள். கருச்சிதைவு எனில் 6 வாரங்கள். வாடகைத் தாய் முறையில் குழந்தை பெற்ற பெண்ணிற்கு 12 வாரங்கள். தத்தெடுத்த தாய்க்கு 12 வாரங்கள் | சராசரி தினசரி ஊதியத்தில் 100% |
| 7 | பிரசவத்திறகான செலவீட்டுத் தொகை | காப்பீடு பெற்ற பெண் (அ) காப்பீடு பெற்ற ஆணின் மனைவிக்கு மருத்துவ வெகுமதியானது இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மருத்துவ வசதிகள் இல்லாத இடங்களில் பிரசவத்திற்காக ஆகும் செலவுகளுக்காக வழங்கப்படுகிறது. | இரண்டு பிரசவங்கள் வரை | ஒரு பிரசவத்திற்கு ரூ.5000 என இரண்டு பிரசவங்கள் வரை |
| 8. | ஈமச்சடங்கிற்கான செலவுகள் | 1. காப்பீடு பெற்ற நபர் இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் ஏதேனும் ஒரு பயன் பெறுவதற்கு தகுதியடைவராய் இருந்திருத்தல் வேண்டும். 2. அக்குடும்பத்தின் மூத்த நபர்/சார்ந்திருப்போர்/ஈமச்சடங்கிற்கான செலவுகளை செய்தவர் இறப்புச் சான்றிதழை சமர்ப்பித்தால் பெறலாம். | காப்பீடு பெற்ற நபரின் இறுதிச் சடங்குகளுக்கு ஒரு முறை வழங்கப்படும் தொகை | அதிகபட்சம் ரூ.10000/- மட்டும் |
| 9. | ராஜீவ் காந்தி ஷ்ரமிக் கல்யாண் யோஜ்னா (RGSKY)-ன் படி வேலையின்மைப்படி / உதவித் தொகை | காப்பீட்டாளரின் விருப்பம் இல்லாமல் தொழிற்சாலை மூடல், ஆட்குறைப்பு அல்லது வேலையின் போது நேரிட்ட விபத்தினால் அல்லாமல் வேறு வகையில் 40% க்கு குறையாமல் ஊனம் அடைந்திருந்தால், 2 வருடங்கள் காப்பீடு பெற்ற வேலையில் இருந்து 78 நாட்கள் ஒவ்வொரு | வேலையின்மைப்படி முழு காப்பீடு பெற்ற வேலை காலத்தில் அதிகபட்சம் 24 மாதங்கள் வழங்கப்படும். ஒரு வருட தொழில் திறன் பயிற்சி, வேலையின்மைப் படி பெறும் காப்பீடு பெற்ற நபருக்கு அவரது திறனை மேம்படுத்துவதற்காக வழங்கப்படுகிறது. அரசு ஒப்புதலளித்த/அங்கீகரிக்க | வேலையின்மைப் படி<br><br>(a) 0-12 மாதங்களுக்கு கடைசி சராசரி தினசரி ஊதியத்தில் 50%<br><br>(a) 13-24 மாதங்களுக்கு கடைசி சராசரி தினசரி ஊதியத்தில் 25%<br><br>2. வேலையின்மைப் படி |

| வ. எண். | பயனின் பெயர் | பங்களிப்பு நிபந்தனைகள் | பயன் காலம் | விகிதம் /பயன் வகை/கருத்துகள் |
|---|---|---|---|---|
| | | பங்களிப்பு காலத்திலும் பங்களிப்புத் தொகை செலுத்தி/ செலுத்தத் தக்கதாக இருந்தால் வழங்கப்படும். | ப்பட்ட நிறுவனத்தால் பெறப்பட்ட முழுதொகையும் இ.எஸ்.ஐ-ஆல் திருப்பி அளிக்கப்படும். | பெறும் போது தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் மருத்துவ பராமரிப்பு பெற முடியும். |
| 10. | விதி 60ன் கீழ் தொழில் புனர்வாழ்விற்கான படி | 45 வயதுக்கு மிகாமலும் மற்றும் வேலையின் போது நேரிட்ட விபத்தால் அடைந்த ஊனம் 40%க்கு குறைவில்லாமல் இருந்தால் | தொழில் புனர்வாழ்வு மையம்/நிறுவனத்தின் விதிமுறைகளின்படி அரசு கல்வி நிறுவனம் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஏதேனும் ஒரு துறையில் பயிற்சி | 1. சாதாரண விகிதம்/இரண்டாம் வகுப்பு இரயில்/பேருந்து கட்டணம் இவற்றில் எது பொருந்துமோ அந்த விகிதத்தில் பயணப்படி. 2. மையத்தால் வசூலிக்கப்பட்ட கட்டணம் அல்லது ஒரு நாளைக்கு ரூ.123 எது அதிகமோ அது வழங்கப்படும். |